# BSNL ஊழியர் சங்கம்
# தேசிய தொலைத்தொடர்பு ஊழியர் சம்மேளனம்
## தமிழ்நாடு தொலைத்தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
## தமிழ் மாநில தொலைத்தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
## தமிழ் மாநில சங்கங்கள்.

## சுமுக தீர்விற்காக 10.06.2015 தர்ணா ஒத்தி வைப்பு

தேதி:-08.06.2015

அன்பார்ந்த தோழர்களே,

நமது சங்கங்கள் சார்பாக 10.06.2015 அன்று சென்னையில் நடைபெற இருந்த தர்ணாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட சங்கங்கள் சிறப்பாக செய்திருந்த சூழ்நிலையில் மாநில நிர்வாகம் இன்று (08.06.2015) நமது சங்கங்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக தோழர் S.செல்லப்பா AGS., தோழர் A.பாபுராதாகிருஷ்ணன் CS, தோழர் M.முருகையா ACS ஆகியோரும் NFTE சங்கத்தின் சார்பாக தோழர் R.பட்டாபி CS மற்றும் தோழர் முரளிதரன் ACS ஆகியோரும் பேச்சு வார்த்தையில் கலந்துக் கொண்டனர். நிர்வாகத்தின் சார்பில் தலைமை பொது மேலாளர் திரு C.V. ரெட்டி அவர்களும், திரு ரவி பாபு GM(HR) மற்றும் திரு M.ராஜி DGM(A) ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

மாநில நிர்வாகம் 7ஆம் தேதிக்குள் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம் பட்டுவாடா செய்வது, அவர்களுக்கான EPF, ESI முறையாக அவர்களின் கணக்கில் செலுத்துவது, ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஊழியருக்கு அடையாள அட்டை வழங்குவது, டெண்டர் ஒப்பந்தத்தில் உள்ள போனஸ் வழங்குவது உள்ளிட்ட பிரச்சனைகளை முறைப்படுத்துவதற்கு மாவட்ட மாநில அளவில் அதிகாரிகளை பொறுப்பாக்குவது என ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் தற்போதுள்ள பிரச்சனைகள் தொடர்பாக விவாதிப்பதற்கு ஜூன் 12ஆம் தேதி மூத்த முதன்மை பொது மேலாளர் திருமதி பூங்குழலி உள்ளிட்ட அதிகாரிகளை உள்ளடக்கி பேச்சு வார்த்தைக்கென தேதி நிர்ணயம் செய்துள்ளது.

**மாநில நிர்வாகம் ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் அணுகுவதில் உள்ள முன்னேற்றத்தை கணக்கில் கொண்டு 10.06.2015 அன்று நாம் நடத்துவதாக இருந்த சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன் தர்ணாவை ஒரு மாத காலம் ஒத்தி வைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.**

கோரிக்கைகளை வென்றடைய உறுதியாக செயல்பட்ட மாவட்ட சங்கங்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு, பிரச்சனை தீர்வு காணப்படவில்லை எனில் அடுத்து வரும் போராட்டங்களுக்கு தயாராக இருக்கும் படி மாவட்ட/ கிளைச் சங்கங்களை கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| A.பாபு ராதாகிருஷ்ணன் | R.பட்டாபிராமன் | C.வினோத்குமார் | R.செல்வம் |
|---|---|---|---|
| மாநில செயலாளர் | மாநில செயலாளர் | மாநில செயலாளர் | மாநில செயலாளர் |
| BSNLEU | NFTE BSNL | TNTCWU | TMTCLU |